செய்தி வெளியீடு எண்: 287 நாள் : 16.06.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (16.6.2015) தலைமைச் செயலகத்தில், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை சார்பில், கடலூர் மாவட்டம் – கடலூரில் 54 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசினர் கூர்நோக்கு இல்ல பணியாளர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், விருதுநகர் மாவட்டம் – மல்லிபுதூரில் 1 கோடியே 73 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசினர் குழந்தைகள் இல்ல பணியாளர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்களையும் திறந்து வைத்து, மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 4 கோடியே 49 லட்சம் ரூபாய் செலவிலான 31 நகரும் சிகிச்சைப் பிரிவு வாகனங்களின் சேவையினை துவக்கி வைத்தார்கள்.

பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படுகின்ற குழந்தைகளையும், சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட குழந்தைகளையும், பாலியல் வன்கொடுமைகள் மற்றும் ஆள்கடத்துதல் போன்றவற்றில் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளையும் பாதுகாத்து, அவர்களுக்கு கல்வி, தொழிற் பயிற்சி மற்றும் மறுவாழ்வு வழங்குதல் போன்ற புனர்வாழ்வுப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சமூக பாதுகாப்புத் துறையின் வாயிலாக செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கடலூர் மாவட்டம் – கடலூரில் 3650 சதுர அடி கட்டட பரப்பளவில் அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர், சமையலர், காவலர் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு 54 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், விருதுநகர் மாவட்டம் – மல்லிபுதூரில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்லத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர்,

தலைமை காவலர், வாயிற் காவலர், பாதுகாவலர், சமையலர், காவலர் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு 11,550 சதுர அடி கட்டட பரப்பளவில் 1 கோடியே 73 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் இன்று சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட குடியிருப்பு கட்டடங்களின் மொத்த மதிப்பு 2 கோடியே 28 லட்சம் ரூபாய் ஆகும்.

மாவட்டத் தலைநகரங்களில் 6 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பயன்பெறும் குழந்தைகளுக்கும் அவர்களது துணையாளர்களுக்கும் போக்குவரத்து பயணச் சலுகை வழங்கப்பட்டாலும், கடுமையாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இம்மையங்களுக்கு தொடர்ந்து வருவதில் சிரமங்கள் உள்ளதால், இம்மையங்களின் முழு பயனையும் அவர்களால் பெற இயலவில்லை. எனவே, மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 32 நகரும் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, அனைத்து கிராமம் மற்றும் நகர்ப் பகுதிகளில் உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகள் பயன்பெறும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் வாகனங்கள் மூலம் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் இருப்பிடத்திற்கே சென்று சிகிச்சை அளித்திடும் வகையில் 4 கோடியே 49 லட்சம் ரூபாய் செலவிலான 31 நகரும் சிகிச்சைப் பிரிவு வாகனங்களின் சேவையினை துவக்கி வைக்கும் அடையாளமாக 2 ஓட்டுநர்களுக்கு வாகனத்தின் சாவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

நகரும் சிகிச்சைப் பிரிவு வாகனங்களில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்குத் தேவைப்படுகின்ற பிசியோதெரபி சாதனங்களைக் கொண்டு, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் பணியாற்றும் முடநீக்குவல்லுநர்கள் மற்றும் பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர்கள் மாற்று திறனாளிக் குழந்தைகளின் இருப்பிடங்களுக்கே சென்று சிகிச்சை அளிப்பார்கள். இந்த சிறப்பு வாகனங்களில், இயன்முறை சிகிச்சைக் கருவிகளோடு செயல் திறன் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, பிறந்த குழந்தைகளை பரிசோதனை செய்தல், ஆரம்ப நிலையில் குறைகளைக் கண்டறிதல், உதவி உபகரணங்களுக்கான மதிப்பீடு செய்தல், பயிற்சி அளித்தல், விளையாட்டு முறையில் சிகிச்சை அளித்தல் போன்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளும் அளவிற்கு வாகனத்தின் உட்புறம் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவ்வாகனங்களின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள், குறுந்தகடுகள், தகவல் கையேடுகள் போன்றவை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப, தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., மாற்றுத் திறனாளிகள் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு பொ. சிவசங்கரன், இ.ஆ.ப., மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 16.6.2015